# பன்னாட்டு நாணய நிதியம் இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி பற்றிய இரண்டாவது மீளாய்வு மீதான அலுவலர் மட்ட இணக்கப்பாட்டினையும் 2024 உறுப்புரை IV ஆலோசனையையும் நிறைவுசெய்துள்ளது

விஜயத்தின் நிறைவிலான பத்திரிகை வெளியீடுகள், பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் குழு நாட்டிற்கு விஜயம்செய்த பின்னர் கண்டறியப்பட்ட பூர்வாங்க விடயங்களைத் தெரிவிக்கின்ற கூற்றுக்களை உள்ளடக்குகின்றன. இக்கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களேயன்றி, அவை பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்தினைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இவ்விஜயத்தின் பூர்வாங்கமாகக் கண்டறியப்பட்டவைகளின் அடிப்படையில் அலுவலர்கள் அறிக்கையொன்றினைத் தயாரித்து முகாமைத்துவ ஒப்புதலுக்குட்பட்டு கலந்துரையாடலுக்காகவும் தீர்மானத்திற்காகவும் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபைக்கு அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

- *பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களும் இலங்கை அதிகாரிகளும் நான்கு ஆண்டு விரிவாக்கப்பட்ட நிதி வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் மீளாய்வினையும் 2024 உறுப்பு IV ஆலோசனையையும் நிறைவுசெய்வதற்கான பொருளாதாரக் கொள்கைகள் மீதான அலுவலர் மட்ட இணக்கப்பாட்டினை எட்டியுள்ளனர். மீளாய்வானது பன்னாட்டு நாணய நிதியத்தின் முகாமைத்துவத்தினால் அனுமதிக்கப்பட்டு பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபை மூலம் நிறைவுசெய்யப்பட்டவுடன் நிதியிடலில் சிறப்பு எடுப்பனவு உரிமை 254 மில்லியனுக்கு (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 337 மில்லியன்) இலங்கை பெறுவழியினைக் கொண்டிருக்கும்.*
- *பேரண்ட பொருளாதார கொள்கை மறுசீரமைப்புக்கள் பயனளிக்கத் தொடங்கியுள்ளன. மறுசீரமைப்பு உத்வேகத்தை நிலைநிறுத்தி ஆளுகை பலவீனங்களையும் ஊழல் பாதிக்கப்படும் தன்மைகளையும் கையாளுவது நீடித்து நிற்கும் மீட்சியினை நோக்கியும் உறுதியான மற்றும் வசதிக்குட்படுத்துகின்ற வளர்ச்சியையும் நோக்கிய பாதையொன்றில் பொருளாதாரத்தை இடம்பெறச்செய்வதற்கு மிக முக்கியமானதாகும்.*
- *பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை மூலமான மீளாய்வை நிறைவுசெய்தல் வேண்டுவது: (i) முன்கூட்டிய நடவடிக்கைகளின் அதிகாரிகள் மூலமான நடைமுறைப்படுத்தல்; (ii) நிதியிடல் உத்தரவாத மீளாய்வினை நிறைவுசெய்தல், பல்தரப்பு பங்காளர்களின் நிதியிடல் பங்களிப்புக்களை உறுதிசெய்தல் மற்றும் படுகடன் மறுசீரமைப்புடன் கூடிய போதுமான முன்னேற்றத்தினை மதிப்பிடுதல்.*

**கொழும்பு, இலங்கை – 2024 மாச்சு 21:** கொழும்பில் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களின் பின்னர் பன்னாட்டு நாணய நிதியத்தின் மூத்த பணிக்குழு பிரதானி திரு. பீட்டர் பிரூவர் மற்றும் துணை பணிக்குழுப் பிரதானி கற்ஷியாரினா ஸ்விறிட்செங்கா ஆகியோர் பின்வரும் அறிக்கையினை வெளியிட்டுள்ளனர்:

"பன்னாட்டு நாணய நிதிக் குழு, 4 ஆண்டு விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாடொன்றின் மூலம் ஆதரவளிக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரண்டாவது மீளாய்வு மீது இலங்கை அதிகாரிகளுடன் அலுவலர்மட்ட இணக்கப்பாட்டினை எட்டி 2024 உறுப்பு IV ஆலோசனைக் கலந்துரையாடல்களை நிறைவுசெய்துள்ளது. சிறப்பு எடுப்பனவு உரிமை 2.3 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) கொண்ட மொத்தத் தொகையொன்றுக்கு பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபை மூலம் 2023 மாச்சு 20 அன்று விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாடு ஒப்புதலளிக்கப்பட்டது.

"அலுவலர் மட்ட உடன்படிக்கையானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியத்தின் முகாமைத்துவத்தினதும் பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபையினதும் ஒப்புதலுக்குட்பட்டதாகக் காணப்படுவதுடன் இது, (i) முன்கூட்டிய நடவடிக்கைகளை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தல்; (ii) பல்தரப்பு பங்காளர்களின் நிதியிடல் பங்களிப்புக்களை உறுதிசெய்தல் அத்துடன் மறுசீரமைத்தலானது உரிய கால விதத்திலும் நிகழ்ச்சித்திட்டத்தின் படுகடன் இலக்குகளுக்கு இசைவாகவும் நிறைவுசெய்யப்படும் என்ற நம்பிக்கையினை வழங்குவதற்கு படுகடன் மறுசீரமைப்புடன் போதுமான முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளதா என்பதன் மீது கவனம் செலுத்துகின்ற நிதியிடல் உத்தரவாத மீளாய்வினை நிறைவுசெய்தல் என்பவற்றில் தங்கியுள்ளது.

“நிறைவேற்றுச் சபை மீளாய்வை நிறைவுசெய்தலின் பின்னர் இலங்கை, சிறப்பு எடுப்பனவு உரிமை 254 மில்லியன் தொகைக்கான (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 337 மில்லியன்) அணுகலினைக் கொண்டிருக்கும் என்பதுடன் இது ஏற்பாட்டின் கீழ் பன்னாட்டு நாணய நிதியத்தின் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதியிடல் ஆதரவினை சிறப்பு எடுப்பனவு உரிமை 762 மில்லியனிற்குக் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1 பில்லியன்) கொண்டுவரும்.

“நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாக்கின்ற அதேவேளை துரிதமான பணவீக்க வீழ்ச்சி, ஆற்றல்வாய்ந்த ஒதுக்கு திரட்டுதல் அத்துடன் பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆரம்ப சமிஞ்சைகளைக் காண்பித்தல் உள்ளடங்கலாக பாராட்டத்தக்க பெறுபேறுகளுடன் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் குறிக்கோள் மிக்க மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரலொன்றை நடைமுறைப்படுத்துவதில் அதிகாரிகள் சிறந்த முன்னேற்றத்தினை அடைந்துவருகின்றனர். கணிசமான அரசிறை மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்து பொது நிதி வலுப்படுத்தப்பட்டுள்ளது. சமூக செலவிடல் மீதான குறிகாட்டி இலக்குகளுக்கானவை தவிர, 2023 திசெம்பர் இறுதிக்கான அனைத்து அளவுசார் செயலாற்றப் பிரமாணங்கள் மற்றும் குறிகாட்டி இலக்குகள் நிறைவுசெய்யப்பட்டு, நிகழ்ச்சித்திட்ட செயலாற்றம் வலுவாகக் காணப்பட்டது. 2024 பெப்புருவரி இறுதிக்கு முன்னர் செய்யப்படவேண்டிய அநேகமான கட்டமைப்பு சார்ந்த அளவுகோல்களும் ஒன்றில் நிறைவுசெய்யப்பட்டிருந்தன அல்லது தாமதமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. சில துறைகளின் மறுசீரமைப்புக்கள் இன்னும் முன்னெடுக்கப்படுகின்றன.

“பொருளாதார நிலைமை படிப்படியாக மேம்படுகின்றது. வளர்ச்சியானது தொடர்ச்சியாக ஆறு காலாண்டுச் சுருக்கத்திற்குப் பின்னர் சாதக நிலைமைக்குத் திரும்பி 2023 இன் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் முறையே 1.6 சதவீதம் மற்றும் 4.5 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்துள்ளது. தயாரித்தல், நிர்மாணம் மற்றும் பணிகள் என்பவற்றில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை உயர் இடைவெளியிலான பொருளாதாரக் குறிகாட்டிகள் எடுத்துக்காட்டுகின்றன. பணவீக்கம், 2025 செத்தெம்பரில் 70 சதவீத உச்சத்திலிருந்து 2024 பெப்புருவரியில் 5.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. மத்திய வங்கி மூலமான பாரியளவிலான வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகள் மூலம் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், 2024 பெப்புருவரி இறுதியில் ஐ.அ.டொலர் 4.5 பில்லியனாக அதிகரித்துள்ளது.

“மறுசீரமைப்பு உத்வேத்தினை நிலைநிறுத்துதலானது நீண்டகால மீட்சியினை நோக்கிய பாதையில் பொருளாதாரத்தை இடம்பெறச்செய்வதற்கும் உறுதியானதும் அனைவரையும் உள்ளடக்குகின்ற பொருளாதார வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும். அரசிறை மறுசீரமைப்புக்களை நோக்கிய அதிகாரிகளின் கடமைப்பாட்டினை நாம் வரவேற்கின்றோம். 2025 இலும் அதற்கு அப்பாலும் வருவாய் திரட்டல் இலக்குகளை நிறைவேற்றுவதற்கான வருவாய் வழிமுறைகளுடன் ஒன்றிணைந்து ஆதன வரியை அறிமுகப்படுத்துவதை நோக்கிய தொடர்ச்சியான முன்னேற்றம் மிகவும் முக்கியமாகும். வரிச் சேகரிப்புக்களை மேம்படுத்துவதற்கான வருவாய் நிர்வாகமும் ஊழலுக்கெதிரான முயற்சிகளும் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. எரிபொருள் மற்றும் மின்சார விலையிடலில் செலவு மீட்பினைப் பேணுவது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்து தோன்றுகின்ற அரசிறைசார்ந்த இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு உதவும்.

“பணவீக்கமானது எதிர்பார்த்ததைவிடவும் விரைவாக வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளை பணவீக்க அழுத்தங்களை நிலைநிறுத்துவதற்கு உதவியளித்து பேரண்ட பொருளாதார உறுதிப்பாட்டுக்கு ஆதரவளிப்பதற்கு தொடர்ச்சியாகக் கண்காணித்தல் வேண்டப்படுகின்றது. நிகழுகின்ற வெளிநாட்டு நிச்சயமின்மைக்கெதிராக வலுவான ஒதுக்குத் திரட்டுதல் ஊடாக வெளிநாட்டு தாங்கியிருப்புக்களைத் தொடர்ந்து கட்டியெழுப்புவது முக்கியத்துவமிக்கதாகக் காணப்படுகின்றது.

“நிகழ்ச்சித்திட்ட பிரமாணங்களுக்கு ஒத்திசைவாக படுகடன் முகாமைத்துவம் பற்றி அலுவல்சார் கடன்கொடுநர் குழுவுடனும் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியுடனும் கோட்பாட்டு ரீதியான இலங்கையின் இணக்கப்பாடுகள் இலங்கையின் படுகடனை நிலைபெறுதன்மையினை நோக்கி இடம்பெறச்செய்வதில் முக்கிய மையிற்கல்களாகக் காணப்பட்டன. நிகழ்ச்சித்திட்ட பிரமாணங்களுக்கிசைவாக அலுவல்சார் கடன்கொடுநர்களுடன் இணக்கப்பாடுகளை இறுதிப்படுத்துவதும் உரியகால விதத்தில் முக்கிய வெளிநாட்டு தனியார் கடன்கொடுநர்களுடன் கோட்பாட்டளவில் இணக்கப்பாடுகளை எட்டுவதும் முக்கிய அடுத்த படிமுறைகளாகக் காணப்படுகின்றன. இலங்கையின் படுகடன் நிலைபெறுதன்மையை நடுத்தரகாலத்தில் மீளநிலைப்படுத்துவதில் இது உதவும்.

“ஆளுகையை கண்டறிதல் அறிக்கையின் முக்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைத் திட்டத்தினை அதிகாரிகள் அண்மையில் வெளியிட்டமை வரவேற்கத்தக்க படிமுறையொன்றாகும். இம்மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கான உறுதியான முயற்சிகள், ஊழல் இடர்நேர்வுகளைத்

தீர்த்து, பொருளாதார நம்பகத்தன்மையை மீளக்கட்டியெழுப்பி, மிகவும் ஆற்றல்வாய்ந்ததும் அனைவரையும் உள்ளடக்குகின்றதுமான வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்கும் அத்தியாவசியமானதாக அமைந்திருக்கும்.

‘‘பன்னாட்டு நாணய நிதியப் பணிக்குழு நுவரெலியாவில் தேயிலைத் தோட்ட பணியாளர்களைச் சந்தித்து இலங்கையின் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள் முகங்கொடுக்கின்ற சில சவால்களைப் பற்றி நேரடியாக அறிந்துகொண்டது. சமூகப் பாதுகாப்பு வலைகளின், குறிப்பாக அஸ்வெசும திட்டத்தின் இலக்கிடல், போதுமான தன்மை மற்றும் உள்ளடக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் ஏழைகளையும் பாதிக்கப்படக்கூடியவர்களையும் பாதுகாப்பதற்கு மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றன.

‘‘பன்னாட்டு நாணய நிதியக் குழு சனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர். பி. நந்தலால் வீரசிங்க, மின்வலு எரிசக்தி அமைச்சர் திரு. காஞ்சன விஜயசேகர, இராஜாங்க அமைச்சர் திரு. செஹான் சேமசிங்க, சனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி திரு. சாகல ரத்நாயக்க, திறைசேரியின் செயலாளர் திரு. கே. எம். மஹிந்த சிறிவர்த்தன, ஏனைய மூத்த அரசாங்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள், ஆகியோருடன் சந்திப்புக்களை நடாத்தியது. பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறை, சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளையும் பன்னாட்டு நாணய நிதியக் குழு சந்தித்தது.

‘‘உன்னதமான ஒத்துழைப்பிற்காக நாம் அதிகாரிகளுக்கு நன்றி கூறுகின்றோம்’’